# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.14707/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 24.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திருமதி. எஸ். சாந்தி<br>அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி<br>இளம்பிள்ளை<br>சேலம் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>ஆசிரியர் தேர்வு வாரியம்<br>4வது தளம், ஈ.வெ.ரா. சம்பத் மாளிகை<br>கல்லூரி சாலை, சென்னை – 6.<br><br>பொதுத் தகவல் அலுவலர்<br>பள்ளிக் கல்வி இயக்குநரகம்<br>கல்லூரி சாலை, சென்னை – 6. |

----------

இவ்வாணையத்தில் இன்று (24.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திருமதி. எஸ். சாந்தி வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர்கள் திரு. ஜி. ஆரோக்கியசாமி, இணை இயக்குநர், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் திருமதி. சி. உஷாராணி, இணை இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநரகம், கல்லூரி சாலை, சென்னை – 6 அவர்கள் வந்திருந்தார்கள்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 05.06.08 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பிய மனுவில் தமிழ்நாடு கல்வி, சார்நிலைப் பள்ளி 1997ஆம் ஆண்டில் மனுதாரர் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், பள்ளி உதவி ஆசிரியர், கணிதப் பாடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது, பணிப்பதிவேட்டில் தர எண். பதிவு செய்தல், தர எண் கொண்ட தெரிவு ஆணை நகல் வழங்குவது சம்பந்தமாக தகவல் கோரியிருந்தார்.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் 10.9.09 மற்றும் 16.9.09 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு தகவல்களை வழங்கியதாகவும், வழங்கிய தகவலின் நகலை இவ்வாணையத்திற்கு சமர்ப்பித்ததன் அடிப்படையிலும், மனுதாரர் வராத நிலையிலும் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 06.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.14707/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
ஆசிரியர் தேர்வு வாரியம்
4வது தளம், ஈ.வெ.ரா. சம்பத் மாளிகை
கல்லூரி சாலை, சென்னை – 6.

பொதுத் தகவல் அலுவலர்
பள்ளிக் கல்வி இயக்குநரகம்
கல்லூரி சாலை,
சென்னை – 6.

திருமதி. எஸ். சாந்தி
அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
இளம்பிள்ளை
சேலம் மாவட்டம்.